செ.வெ.எண்: 05 நாள்: 02.02.2017

# தமிழ் ஆட்சிமொழியினை அலுவலகங்களில் முழுவதுமாக நடைமுறைப்படுத்த வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பில் ஆட்சிமொழி பயிலரங்கம் / கருத்தரங்கங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (02.02.2017) துவக்கி வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு தமிழ்வளர்ச்சித்துறையின் சார்பில் எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழ்மொழி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையிலும், தமிழ் ஆட்சிமொழியினை அலுவலகங்களில் முழுவதுமாக நடைமுறைப்படுத்தும் நோக்கத்திலும் "தமிழ் ஆட்சிமொழி பயிலரங்கம் / கருத்தரங்கம்" நடத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் இன்று (02.02.2017) "தமிழ் ஆட்சிமொழி பயிலரங்கம் / கருத்தரங்கம்" துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த பயிலரங்கத்தில் ஆட்சிமொழி ஆய்வும், குறைகளைவு நடவடிக்கைகளும், ஆட்சிமொழி வரலாறு, ஆட்சிமொழி சட்டம், அலுவலக குறிப்புகள், வரைவுகள், செயல்முறை ஆணைகள் தயாரித்தல், ஆட்சிமொழி செயலாக்கம் ஆணைகள், மொழிப்பயிற்சி மற்றும் மொழிப்பெயர்ப்பு கலைச்சொல்லாக்கம் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்படவுள்ளது. இந்த பயிலரங்கம் இன்று (02.02.2017) முதல் நாளை வரை நடைபெறவுள்ளது.

மேலும் அரசு அலுவலகங்களில் பேச்சு வழக்கில் உபயோகப்படுத்தப்படும் ஆங்கிலச்சொற்களை தவிர்த்து, தமிழிலேயே உரையாடுவதை வழக்கமாக்கி கொள்ள வேண்டும். அலுவலர்களிடையே குறுஞ்செய்தி மூலம் தகவல் பரிமாறப்படும் போது தமிழ் வழியிலேயே அனுப்ப வேண்டும். இதுபோன்ற நடவடிக்கையின் மூலம் தமிழ்மொழி, பழமையின் சிறப்பும், ஆற்றலும் ஒருங்கே பெற்று விளங்கிட வழிவகை செய்யும். ஒலி வழியே மொழி, மொழி வழியே அறிவு, அறிவு வழியே ஆற்றல், ஆற்றல் வழியே மேன்மை, மேன்மை வழியே மேம்பாடு. எனவே இப்பயிலரங்கத்தில் கலந்து கொள்ளும் அனைவரும் கருத்துரையாளர்களால் வழங்கப்படும் பயிற்சிகளை முறையாக பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, தமிழ்வளர்ச்சி துணை இயக்குநர், மதுரை மாவட்டம் முனைவர்.க.பசும்பொன், தமிழ்வளர்ச்சி துணை இயக்குநர்(பொ), புதுக்கோட்டை முனைவர்.க.சிவசாமி, திருநெல்வேலி மண்டல தமிழ்வளர்ச்சி துணை இயக்குநர் (ஓய்வு) திரு.க.கபிலர், உதவி ஆணையர் (கலால்) திருமதி.ஜெயபாரதி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**